**அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி,**
**சங்கராபுரம்-606 401, கள்ளக்குறிச்சி மாவட்டம்**

**ஒப்பந்த அறிவிப்பு எண்: 2945/A5/2024** **நாள்: 11.09.2024**

பொருள்: நிர்வாகம் - அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி, சங்கராபுரம் - 2024-2025-ஆம் ஆண்டிற்கு - கல்லூரி வளாகத்திற்குள் உள்ள சிற்றுண்டிச் சாலை நடத்திட விலைப்புள்ளி கோருவது - தொடர்பாக.

******

இக்கல்லூரி வளாகத்திற்குள் உள்ள சிற்றுண்டிச்சாலையினை 2024 - 2025-ஆம் ஆண்டிற்கு நடத்த அனுபவம் பெற்ற சிற்றுண்டிச் சாலை உரிமையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**ஒப்பந்ததாரர்களுக்கான பொது நிபந்தனைகள்**

1. சிற்றுண்டிச்சாலை அதற்கென ஒதுக்கப்பட்ட கட்டிடத்தில் நடத்த மாத வாடகை பொதுப்பணித்துறையால் நிர்ணயம் செய்யப்படும். ஒவ்வொரு மாதமும் வாடகையினை முதல் வாரமே அலுவலகத்தில் செலுத்த வேண்டும். இத்துடன் சிற்றுண்டிச்சாலைக்கு என உபயோகப்படுத்தப்படும் மின்கட்டணம் மற்றும் குடிநீர் போன்ற இனங்களுக்கான உரிய கட்டணத்தையும் அவ்வப்பொழுது செலுத்த வேண்டும்.

2. சிற்றுண்டிச்சாலை நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்ட உரிமையாளர் ரூ.20000/- (ரூபாய். இருபதாயிரம் மட்டும்) முதல்வர் அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி, சங்கராபுரம் என்ற பெயரில் தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் (Term Deposit) பிணை வைப்புத் தொகையாக செலுத்த வேண்டும். இந்த பிணை வைப்புத்தொகை ஒப்பந்ததாரர் ஒப்பந்தகாலம் முடிவடைந்து சிற்றுண்டிச் சாலையினை முறையாக காலி செய்த பின்னர் திரும்ப வழங்கப்படும்.

3. சிற்றுண்டிச்சாலைக்கு தேவையான சமையல் பாத்திரங்கள் மற்றும் மேஜை முதலிய எல்லா பொருட்களும் தங்கள் செலவிலேயே எடுத்துவந்து பயன்படுத்த வேண்டும்.

4. ஒப்பந்த காலத்தில் கட்டிடத்திற்கோ, கட்டிடத்தில் பொருத்தப்பட்ட மின்சாதனங்களுக்கோ மற்றும் இதர பொருட்களுக்கோ சேதம் ஏதும் ஏற்பட்டால் அதனை ஒப்பந்ததாரர் சொந்த செலவிலேயே சரிசெய்ய வேண்டும். தவறினால் சேதத்திற்கு ஏற்படும் இழப்பீட்டு தொகையினை வைப்புத்தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும். மேலும் அரசு விதிமுறைப்படி ஒப்பந்ததாரர் மீது நடவடிக்கையும் எடுக்கப்படும்.

-2-

5. சிற்றுண்டிச் சாலையை எப்போதும் தூய்மையாக வைத்திருக்கவேண்டும். மாணவர்களோ, பிறரோ சுவரில் எழுதுவது, நோட்டீஸ் ஒட்டுவது ஆகியவற்றை அனுமதிக்க கூடாது. மேற்காணும் நிகழ்வுகள் ஏதாவது முதல்வரின் கவனத்திற்கு தெரிய வந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். சிற்றுண்டிச்சாலையை தூய்மையாக வைத்திருப்பது ஒப்பந்ததாரர் பொறுப்பாகும்.

6. அனைத்து அரசு வேலைநாட்களிலும் சிற்றுண்டிச் சாலை காலை 8.30 மணி முதல் மாலை 5.45 மணி முடிய தொடர்ந்து நடத்தப்பட வேண்டும். மேற்படி காலங்களில் முதல்வரின் முன் அனுமதி இல்லாமல் சிற்றுண்டிச்சாலையை மூடக்கூடாது.

7. விற்பனை செய்யப்படும் உணவுப் பொருட்களில் விலைப்பட்டியலை சிற்றுண்டிச்சாலைக்கு வருவோர் பார்வைக்கு தெரியும்படி தகவல் பலகை வைக்கப்படவேண்டும்.

8. ஒப்பந்தம் பெறப்பட்டவுடன் தமிழ்நாடு அரசு உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறையில் (உணவு பாதுகாப்பு பிரிவு) பதிவு செய்யப்படவேண்டும்.

**9. மகளிர் சுய உதவிக்குழு விண்ணப்பிக்கும் பொழுது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பதிவுசெய்த சான்றிதழை சமர்பிக்க வேண்டும்.**

10. போதைப்பொருட்கள், காலாவதியான உணவுப்பொருட்கள் விற்பனை செய்யக்கூடாது.

11. வழங்கப்பட உள்ள குத்தகை ஒப்பந்தம் முற்றிலும் தற்காலிகமானது. அரசு விதிமுறைகளையும் உணவுப்பொருட்களின் அளவு, தரம் மற்றும் தன்மை ஆகியவைகள் திருப்தி ஏற்படும் வகையில் இல்லை என்று தெரியவந்தால் சிற்றுண்டிச்சாலை நடத்துவதற்குரிய அனுமதியினை எவ்வித முன் அறிவிப்பும் இல்லாமல் ரத்து செய்ய முதல்வருக்கு அதிகாரம் உண்டு.

12. விலைப்புள்ளி தரப்படவேண்டி பொருட்களின் விவரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு செயலாற்ற விருப்பம் உள்ளவர்கள் மட்டும் அதற்கான ஒப்பந்த புள்ளிகளை மூடி முத்திரையிடப்பட்ட உறையில் வைத்து இக்கல்லூரிக்கு (முதல்வர், அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி, சங்கராபுரம்-606401 , கள்ளக்குறிச்சி மாவட்டம்) என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும். உறையின் மீது **ஒப்பந்த அறிவிப்பு எண்: 2945/A5/2024 நாள்: 11.09.2024 Due Date: 25.09.2024** என்று குறிப்பிட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளிகள் 25.09.2024 மாலை 05.00 மணிக்குள் இக்கல்லூரி முதல்வருக்கு வந்து சேரவேண்டும். மேற்குறிப்பிட்ட காலக்கெடுவிற்கு பின்னர் பெறப்படும் ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

நிர்வாக காரணத்தால் மேற்காணும் ஒப்பந்த அறிவிப்பு எவ்வித காரணமும் தெரிவிக்கப்படாமல் ரத்து செய்வதற்கு முதல்வருக்கு முழு அதிகாரம் உள்ளது.

முதல்வர் (பொ)

இணைப்பு : விலைப்புள்ளி தரப்படவேண்டிய பொருட்களின் விவரம்.

பெறுநர்

1. கல்லூரி வளாகத்திலுள்ள அனைத்து அறிவிப்புப் பலகைகள்
2. கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலக அறிவிப்பு பலகை
3. சார்நிலை கருவூல அலுவலர், சங்கராபுரம் அறிவிப்பு பலகை
4. மாவட்ட கருவூல அலுவலர், கள்ளக்குறிச்சி மாவட்டம்
5. வட்டாட்சியர் அலுவலர், சங்கராபுரம் அறிவிப்பு பலகை
6. வட்டார வளர்ச்சி அலுவலர், சங்கராபுரம்
7. செயல் அலுவலர், சங்கராபுரம் பேருராட்சி
8. திட்ட இயக்குநர், மகளிர் திட்டம், மாவட்ட ஆட்சியர் வளாகம், கள்ளக்குறிச்சி
9. மாவட்ட மகளிர் திட்ட அலுவலகம், கள்ளக்குறிச்சி மாவட்டம
10. தலைவர், நகர வர்த்தக சங்கம் சங்கராபுரம்.
11. கல்லூரி இணையதள பொறுப்பாசிரியர் (இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் பொருட்டு)

மாதிரி படிவம்

**அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி,**
**சங்கராபுரம் - 606401,**
**ஒப்பந்த அறிவிப்பு எண்: 2945/A5/2024 நாள்: 11.09.2024**

**சிற்றுண்டி சாலை விண்ணப்ப படிவம்**

உறுப்பினர் பெயர் :

தகப்பனார் பெயர் :

தற்போதைய விலாசம் :

ஆதார் எண் :

சிற்றுண்டிச் சாலையில் வழங்கும் கீழ்கண்ட உணவுப்பொருட்கள் தரமானதாக, சுத்தமாக, சுகாதாரமாக இருத்தல் அவசியம். கீழ்கண்ட உணவுப்பொருட்களுக்கான தங்களது விலையை பூர்த்தி செய்து உறைக்குள் (Cover) வைத்து சீல் செய்து தபாலில் அனுப்பவேண்டும்.

| வ.எண். | உணவு பொருட்கள் விவரம் | அளவு | ரூ. |
|---|---|---|---|
| 1. | டீ | 150 மி.லி. | ரூ. |
| 2. | காபி | 150 மி.லி | ரூ. |
| 3. | சுக்கு காபி | 150 மி.லி | ரூ. |
| 4. | பால் | 150 மி.லி | ரூ. |
| 5. | பருப்பு வடை | 1 எண் | ரூ. |
| 6. | மெது வடை | 1 எண் | ரூ. |
| 7. | கீரை வடை | 1 எண் | ரூ. |
| 8. | கேக் | 1 எண் | ரூ. |
| 9. | இட்லி | 1 எண் | ரூ. |
| 10. | தோசை | 1 எண் | ரூ. |
| 11. | பொங்கல் | 300 கிராம் | ரூ. |
| 12. | அளவு சாப்பாடு (சாம்பார், ரசம், மோர், அப்பளம், பொரியல்) | 500 கிராம் | ரூ. |
| 13. | தக்காளி சாதம் | 500 கிராம் | ரூ. |
| 14. | எலுமிச்சை சாதம் | 500 கிராம் | ரூ. |
| 15. | தயிர் சாதம் | 500 கிராம் | ரூ. |
| 16. | சாம்பார் சாதம் | 500 கிராம் | ரூ. |

**விண்ணப்பதாரரின் கையொப்பம்**

**அனுப்ப வேண்டிய முகவரி**
முதல்வர் (மு.கூ.பொ),
அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி,
சங்கராபுரம் - 606401.